# இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு

## பாதுகாப்பான விளையாட்டுக் கொள்கை

### 1. கொள்கை அறிக்கை

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவானது விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளின் மரியாதை மற்றும் கண்ணியம் நிலைநாட்டப்படும் பாதுகாப்பான மற்றும் ஆதரவானதொரு விளையாட்டுச் சூழலை உருவாக்க உறுதிபூண்டுள்ளது. சர்வதேச ஒலிம்பிக் குழுவானது, பாலியல் தொல்லை அல்லது துஷ்பிரயோகம் என்பவற்றால் தனிநபர் மற்றும் நிறுவன ஆரோக்கியத்திற்கு ஏற்படுத்தப்படும் தடையை இனங்காண்பதற்கு அதன் உறுப்பினர்களை ஊக்குவிக்கின்ற வகையில், பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் குறித்த ஒருமித்த அறிக்கையை 2007 இல் ஏற்றுக்கொண்டுள்ளது.

விளையாட்டு வீரர்களின் செயற்றிறன் குறைவு மற்றும் விளையாட்டு வீரர்களின் விலகல் போன்ற விளைவுகளை ஏற்படுத்தும் பாலியல் தொல்லையும் துஷ்பிரயோகமும் எந்தவொரு விளையாட்டினதும் எந்தவொரு மட்டத்திலும் இடம்பெற முடியும்.

ஆகவே, இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவானது, பின்வரும் நோக்கங்களுடன் பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகத் தடுப்பு குறித்த இப்பாதுகாப்பான விளையாட்டுக் கொள்கையை (“கொள்கை”) ஏற்றுக் கொள்கின்றது:

- விளையாட்டுக்களில் பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றின் ஏதேனும் வடிவம் இடம்பெறுவதை அடையாளங் கண்டு தடுத்தல்;
- பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோக நிகழ்வுகளில் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூறப்படுபவர்கள் சார்பாக ஆதரவைப் பெற ஊக்குவித்தல்;
- விளையாட்டு வீரர்கள் அனைவரினதும் ஏனைய பங்குதாரர்களினதும் உள, உடல் மற்றும் உணர்வு ரீதியான நல்வாழ்வுக்கான உகந்த சூழலொன்றை உருவாக்குதல்;
- அத்தகைய பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோக நிகழ்வுகளில் பின்பற்றப்படவேண்டிய ஒழக்காற்று நடைமுறையொன்றை அமைத்தல்;
- பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோக நிகழ்வுகளை விசாரிப்பதற்கு மற்றும் தேவையான தண்டனைகளை விதிப்பதற்கு சுயாதீனமான மற்றும் வெளிப்படைத்தன்மையான ஒழுக்காற்றுக் குழுக்களை நிறுவுதல்; அத்துடன்
- இலங்கையில் விளையாட்டுத்துறை பங்குதாரர்கள் அனைவர் மத்தியிலும் பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் குறித்த கல்வியை வழங்களும் விழிப்புணர்வை ஏற்படுத்தலும்.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவானது பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் குறித்து முற்றிலும் சகிப்புத்தன்மையற்ற நிலைப்பாட்டை கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் இது, ஒழுக்காற்று, தண்டனை மற்றும் ஏனைய பொருத்தமான அளவீடுகளை பரிந்துரைப்பதற்கு இயைபான விசாரணைக் குழுவை இயலுமாக்கி வலுப்படுத்துவதற்காக பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் குறித்து முறைப்பாடு/ குற்றச்சாட்டொன்று மேற்கொள்ளப்படுமிடத்து பக்கச்சார்பற்ற மற்றும் நியாயமான நடவடிக்கைகளை பேணுதலானது நிர்வாகிகள், பயிற்றுவிப்பாளர்கள், பெற்றோர்கள், போட்டி ஏற்பாட்டாளர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட பங்குதாரர்கள் ஒவ்வொருவரினதும் கடமையாக இருத்தல் வேண்டும்.

## 2. பாதுகாப்பான விளையாட்டுக் கொள்கையின் ஏற்புடைமை

இக்கொள்கை பணிப்பாளர்கள், ஊழியர்கள், நிர்வாக அலுவலர்கள், பயிற்றுவிப்பாளர்கள், போட்டி உத்தியோகத்தர்கள், விளையாட்டு வீரர்கள் தன்னார்வலர்கள், தொழிற்பயிற்சியாளர்கள் மற்றும் பின்வருவனவற்றின் கீழ்வரும் ஏனையவர்கள் உள்ளிட்ட பங்குதாரர்கள் அனைவருக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்:

அ) ஒலிம்பிக் போட்டி நிரலில் உள்ளடக்கப்பட்ட விளையாட்டொன்றை ஆளுகின்ற சம்மேளமொன்றுடன் இணைக்கப்பட்ட தேசிய விளையாட்டுக்கள் சம்மேளனமொன்று.

ஆ) காலத்துக் காலம் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் கீழ் ஏற்றங்கீகரிக்கப்பட்டு வருகின்ற வேறு ஏதேனும் பல் விளையாட்டு போட்டிகள் (அதாவது, ஆசிய விளையாட்டு போட்டிகள், வொதுநலவாய விளையாட்டுக்கள் மற்றும் தெற்காசிய விளையாட்டு போட்டிகள் மற்றும் ஒலிம்பிக் தவிர்ந்த வேறு ஏதேனும் விளையாட்டுக்கள்)

## 3. பிரச்சினையை வரைவிலக்கணப்படுத்தல்

விளையாட்டுத் துறையில் பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகமானது அதிகார தொடர்புகள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பவற்றிலிருந்து உருவாகின்றன. பிரதானமாக அதிகாரத்தில் உள்ள ஆளொருவரிடமிருந்து ஆனாலும் விளையாட்டு வீரர்களாக இருப்பினும் குற்றவாளி என அடையாளம் காணப்படலாம்.

**<u>பாலியல் தொல்லை</u>** என்பது அதிகாரத்தையும் நம்பிக்கையையும் துஷ்பிரயோகம் செய்வதன் அடிப்டையில் செய்யப்படுகிற திட்டமிட்டதாயினுஞ்சரி திட்டமிடப்படாததாயினுஞ்சரி, சட்டரீதியாயினுஞ்சரி சட்டரீதியற்றதாயினுஞ்சரி தனிநபர் ஒருவர் அல்லது குழுவிடம் வெளிப்படுத்தப்படும் பாலியல்சார் சொல்ரீதியான, சொற்கலற்ற அல்லது உடல்ரீதியான நடத்தையை உள்ளடக்கிய நடத்தையைக் குறிக்கின்றது. பாலியல் தொல்லையானது பாதிக்கப்பட்டவரினால் அல்லது அருகில் இருப்பவரினால் தேவையற்றதாக அல்லது வற்புறுத்தப்பட்டதாக இருக்கும் ஒன்றாக கருதப்படுகிறது.

**<u>பாலியல் துஷ்பிரயோகம்</u>**, சம்மதமில்லாத அல்லது சம்மதமளிக்க முடியாத ஏதேனும் பாலியல் செயற்பாட்டை உள்ளடக்கியது. விளையாட்டில் இது பெரும்பாலும் விளையாட்டு வீரர்களை தவறாக பயன்படுத்துவதையும் வலையில் சிக்கவைத்தலையும் உள்ளடக்குகின்றது.

பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் என்பன அத்தகைய சந்தர்பங்களை எளிதாக்கும் நிறுவன ரீதியான கலாச்சாரமொன்றினுள் இடம்பெறுகின்றன. பாலின அடிப்படையிலான தொல்லை, பகிடிவதை மற்றும் தற்பாலினர் வெறுப்பு ஆகியவை விளையாட்டிலான பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகத்தின் அனைத்து அம்சங்களாகும்.

a) **<u>பாலின ரீதியான தொல்லை</u>** என்பது முறையாகவும் தொடர்ச்சியாகவும் செய்யப்படும் ஆனால் பாலியல் ரீதியானதாக இருக்கவேண்டிய அவசியமில்லாத ஒரு பாலினத்தவரை அல்லது மற்றையவரை இழிவுபடுத்தும் வகையில் நடத்துவதை உள்ளடக்கியது.
b) **<u>பகிடிவதை</u>** என்பது பெரும்பாலும் பாலியல் கூறுகளைக் கொண்ட துஷ்பிரயோக துடக்க சடங்குகளை உள்ளடக்கியது என்பதுடன் இதில் புது வரவாளர்களே குறிவைக்கப்படுகின்றனர்.
c) **<u>தற்பாலினர் வெறுப்பு</u>** என்பது செயலற்ற மனவெறுப்பு முதல் பெண் ஓரினச்செயற்கையாளர், ஆண் ஓரினச்செயற்கையாளர், இருபால் சார்ந்த மற்றும் மாற்றுப் பாலினத்தவர் சார்ந்த ஆட்களை பழியாளாக்குதல் வரை இருக்கும் ஒரு வகையான பராபட்சம் மற்றும் பாகுபாடாகும்.

பாதுகாப்பின்மை, குற்றவாளியின் பாரிய உந்துதல்கள் மற்றும் வயது மற்றும் முதிர்ச்சி காரணமாக விளையாட்டு வீரர்கள் இலகுவில் பாதிக்கப்படும் நிலை என்பன இருக்கின்றவிடத்து பாலியல் தொல்லையின் அபாயம் மிக அதிகமாக இருக்கும். பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் பின்வரும் செயல்களை உள்ளடக்கியது ஆனாலும் இவற்றுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது:

- ***உடல் ரீதியானது***
  - தேவையற்ற உடல் தொடர்பை ஏற்படுத்துதல்
  - தேவையற்றவாறு அருகில் நின்றிருத்தல்
  - தொடுதல், தட்டுதல், தடவுதல், அழுத்துதல், கட்டிப்பிடித்தல், கிள்ளுதல்
  - ஒருவரின் பிறப்புருப்பை ஒருவருக்கு நேரெதிரே துலக்குதல் அல்லது தேய்த்தல்
  - பாலியல் வன்கொடுமை

- ***சொல் ரீதியானது***
  - பாலியல் கருத்துக்களை அல்லது மறைமுகமான குறிப்புக்களை செய்தல்

- ஆளொருவரின் பாலினம் அல்லது பாலியல் அடையாளத்தை அவமதித்தல்
- ஆளொருவரின் உடல் தோற்றம், வயது, தனிப்பட்ட வாழ்க்கை, திருமணமான அல்லது திருமணமாகாத நிலை, தாய்மை நிலை குறித்து தெரிவித்தல்
- பாலியல் நகைச்சுவை அல்லது கதைகள் அல்லது பாலியல் கற்பனைகள் குறித்தான விசாரணை
- தொழில்சார் கலந்துரையாடல்களை பாலியல் தலைப்புக்கு திசைதிருப்புதல்
- பாலியல் உதவிகளைக் கோருதல்
- விளையாட்டுத்துறையில் முன்னேற்றமடைவதற்கு கைம்மாறாக பாலியல் சலுகைகளை கோருதல் (ஏதாவதொன்றுக்கு ஏதாவது ஒன்று)
- விசில் அடித்தல் அல்லது பாலியல்சார் தூண்டும் ஒலிகளை எழுப்புதல்
- அபாசமான மற்றும் புண்படுத்தக்கூடிய மொழிகளை பிரயோகித்தல்
- பெயர் தெரியாத தொலைபேசி அழைப்புக்களை ஏற்படுத்தல்
- வரவேற்க்கத்தகாத சமூக அழைப்புக்களை தொடர்ந்து விடுத்தல்
- அரட்டை (வீண் பேச்சு), அவதூறு செய்தல் அல்லது வதந்திகளை பரப்புதல்

- ***சைகை ரீதியானது***
  - வெறித்துப்பார்த்தல், உற்றுப்பார்த்தல், காமமாக பார்த்தல், கண் சிமிட்டுதல் அல்லது பார்த்தல்
  - முத்தங்களை பறக்கவிடுதல், நாக்கை ஆட்டுதல் அல்லது உதடுகளை நக்குதல்
  - பாலியல் ரீதியாக வெளிப்படையான கை அல்லது விரல் அசைவுகள்
  - பாலியல் தூண்டுதலை ஏற்படுத்தும் செயல்களை பாவனை செய்தல்

- ***கட்புல ரீதியான***
  - தேவையற்ற மின்னஞ்சல்கள், குறிஞ்செய்திகளை அனுப்புதல் அல்லது பாலியல் ரீதியான நகைச்சுவை பதிவுகளை இடுதல்
  - சமூக ஊடகங்கள் (அதாவது முகப்புத்தகம், டுவிட்டர், வட்ஸப், வைபர், மெசன்ஜர், ஸ்னப்சட், இன்டாகிராம் போன்றுவை) வழியாக பாலியல் ரீதியாக தூண்டும் கருத்துக்களை இடுதல் மற்றும் தவறான ஊடக நடத்தை
  - பாலியல் தன்மையிலான சுவரெழுத்துக்களை எழுதுதல்
  - பாலியல் ரீதியாக வெளிப்படுத்தும் படங்கள், புகைப்படங்கள், நாட்காட்டிகள், கணணி முகப்புத்திரைகள் அல்லது ஆபாச தளங்களை காட்சிப்படுத்தல்
  - நிகழ்நிலை அல்லது அகல்நிலை தளங்களில் ஒருவரின் அறிவு/ சம்மதமின்றி எடுக்கப்பட்ட அவரது அந்தரங்க படங்கள்/ வீடியோக்களை பதிவிடல் அல்லது பகிர்தல்

பாதுகாப்பான விளையாட்டுக் கொள்கைகளின் நோக்கங்களுக்காக, பாலியல் தொல்லை மற்றும்/ அல்லது துஷ்பிரயோகம் பின்வரும் இடங்களில் இடம்பெறலாம் ஆயினும் இவற்றினுள் மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது:

(a) விளையாட்டு நிகழ்ச்சிகள், விளையாட்டு அரங்குகள், போட்டி நடைபெறும் இடங்கள் மற்றும் பயிற்சி அமர்வுகள்

(b) ஆ) விளையாட்டுடன் தொடர்புபட்ட பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத சம்மேளன அலுவலகங்கள் மற்றும்/ அல்லது ஏனைய அலுவலகங்கள்

(c) விளையாட்டு தொடர்பான சமூக நிகழ்வுகள்ஈ) இயைபான தேசிய விளையாட்டு

(d) சங்கங்கள்/ சம்மேளங்களினதும் அதன் உறுப்பு கலகங்களினதும் வணிக நிகழ்வுகள்

(e) அதவாவது கூட்டங்கள், மாநாடுகள், பயிற்சி அமர்வுகள் மற்றும் பயிற்சி பட்டறைகள்

(f) விளையாட்டு தொடர்பான பயணங்களின் போது

(g) தொலைபேசி, கையடக்க தொலைபேசிகள், சமூக ஊடகங்கள், மின்னஞ்சல், தொலைநகல், வலைத்தளங்கள், தபால் சேவை உள்ளிட்ட ஆனால் அவற்றுக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தாத எந்தவொரு தொடர்பாடல் சாதனம்/ அமைப்பு ஊடாக

(h) ஒருவரது விளையாட்டு தொடர்பான ஈடுபாட்டின் விளைவாக பாலியல் தொல்லை மற்றும்/ அல்லது துஷ்பிரயோகம் இடம்பெறும் ஏதேனும் முறைசார் அல்லது முறைசாரா இடங்கள்

## 4. ஒத்திசைவான உறவுமுறைகள்

### 4.1 பயிற்றுவிப்பாளர் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கிடையிலான உறவுமுறை

பயிற்றுவிப்பாளரொருவர் மற்றும் விளையாட்டு வீரரொருவருக்கிடையிலான உறவுமுறையானது, பொதுவாக பயிற்றுவிக்கப்படும் போது, மதிப்பீடுசெய்யப்படும் போது, விமர்சிக்கப்படும் போது அல்லது பாராட்டபடும் போது பயிற்றுவிப்பாளரால் விளையாட்டு வீரர்கள் மீது அதிகாரத்தை பிரயோகிப்பதை அடிப்படையாகக் கொண்டது. ஆகவே, இவர்கள் இரு தரப்பினருக்குமிடையிலான பாலியல் உறவுமுறையொன்று (ஒத்திசைவாக இருப்பினும்), பயிற்றுவிப்பாளரின் அதிகார துஷ்பிரயோகத்தின் உடனடி அபாயம் மற்றும் விளையாட்டு வீரரின் பாலியல் சுரண்டல் காரணமாக பொருத்தமற்றதாக இருக்கும். மேற்சொல்லப்பட்ட உறவுமுறையின் அடிப்படையில் சமமற்ற தன்மை காரணமாக, விளையாட்டு வீரரின் தன்னார்வ ஒப்புதலும் கூட சர்ச்சைக்குரிய மற்றும் வாதத்திற்கான கருத்தாக இருப்பதோடு அத்தகைய உறவுமுறைகள் பயிற்றுப்பாளரின் நிலையை சரியாக புரிந்துகொள்ள முடியாத நிலைக்கு மாற்றக்கூடிய அக்கறை முரண்பாட்டுக்கு காரணமாக அமையவும் முடியும். அத்தகைய தொழில் முறைக்கு மாற்றமான நடத்தைகள் ஏனைய விளையாட்டு வீரர்களுக்கு பாதகம் விளைவிப்பதோடு அத்தகைய உறவுமுறை காரணமாக அல்லது பாலியல் சலுகைகள் என்று கருதப்படுபவற்றின் காரணமாக மறைமுகமாக நன்மைகளை அல்லது தேவையற்ற அனுகூலங்களை பெற்றுக் கொள்வதற்கான அனுமானத்தையும் உருவாக்கும்.

ஆகவே, பயிற்றுவிப்பாளர்கள் விளையாட்டு வீரர்களுடன் (அவர்களால் பயிற்றுவிக்கப்படுபவர்கள் அல்லது அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளவர்கள்) ஒத்திசைவான உறவுமுறையொன்றை கொண்டிருத்தல் கூடாதென கட்டயப்படுத்தல் முக்கியமானதாகும். ஏனெனில், இது பயிற்றுவிப்பாளரின் தொழில்முறை நேர்மையையும் விளையாட்டு விரர்களின் கல்விசார் நோக்கத்தையும் சமரசம் செய்யும். இந்த நோக்கத்திற்காக இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவானது, அத்தகைய உறவுமுறைகளை இல்லாமலாக்குவதற்கு தடைவாசகமொன்றையும் விளையாட்டு வீரருடனான ஏதேனும் முந்தைய ஒத்திசைவான/ காதல் உறவுமுறை, அந்த உறவுமுறையின் கால எல்லை மற்றும் அத்தகைய உறவுமுறையின் தற்போதைய நிலை என்பவற்றை வெளிப்படுத்துவதற்கான வெளிப்படுத்துகை வாசகம் ஒன்றையும் கூட்டிணைத்துள்ளது.

### 4.2 சக விளையாட்டு வீரர்களுக்கிடையிலான உறவுமுறைகள்

இந்த வகையான உறவுமுறைகள் தடைவிதிக்கப்படவில்லையாயினும் விளையாட்டு வீரர்கள் அத்தகைய உறவுமுறைகளை நிர்வாக அதிகாரிகளிடம் வெளிப்படுத்துவதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். இவ்வெளிப்படுத்துகையானது, இரு தரப்பினரினதும் பெயர்கள், உறவுமுறையின் தன்மை, உறவுமுறையின் கால எல்லை மற்றும் வேறு ஏதேனும் தொடர்புடைய தகவல்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

### 4.3 தேர்வாளர்கள், நிர்வாகிகள் மற்றும் பிறருக்கிடையிலான உறவுமுறைகள்

தேர்வாரள்கள், நிர்வாகிகள் மற்றும் பிறர், எந்தவொரு ஒத்திசைவான உறவுமுறையையும் நிர்வாக அதிகாரிகளுக்கு வெளிப்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். இவ்வெளிப்படுத்துகையானது, இரு தரப்பினரினதும் பெயர்கள், உறவுமுறையின் தன்மை, உறவுமுறையின் கால எல்லை மற்றும் வேறு ஏதேனும் தொடர்புடைய தகவல்களை உள்ளடக்கி இருத்தல் வேண்டும். அவர்கள் தம்மைத்தாமே உரிய குழுக்களிலிருந்து விலக்கிக் கொள்ளவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

## 5. நிவாரணம்

இவ் ஏற்பாடு, யார் முறைப்பாடு அளிக்கலாம், யாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட வேண்டும் மற்றும் முறைப்பாட்டில் என்னனென்ன இருக்க வேண்டும் என்பன பற்றிய தகவல்களை வழங்குகிறது.

### 5.1 யார் முறைப்பாடு அளிக்கலாம்?


ஊழியர், நிர்வாக அதிகாரி, பயிற்றுவிப்பாளர், போட்டியை நடாத்தும் அதிகாரி, விளையாட்டு வீரர், தன்னார்வலர் அல்லது தொழில் பயிற்சியாளர் ஆகியவர்களில் ஒருவர் பாலியல் தொல்லைக்கு ஆளானதாகவோ அல்லது துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாகவோ நம்பினால்,

மேலேயுள்ள 2 ஆம் வாசகத்தில் ("பாதிக்கப்பட்டவர்") அல்லது கீழே பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு ஆளும் ("முறைப்பாட்டாளர்") கீழுள்ள 5.2 என்னும் வாசகத்தில் பரிந்துரைக்கப்பட்டவாறாக, அத்தகைய பாலியல் தொல்லை மற்றும்/ அல்லது துஷ்பிரயோகம் குறித்து அறிந்தவுடன் உடனடியாக முறைப்பாட்டுக் குழுவில் எழுத்தில் முறைப்பாட்டை அளிக்கலாம்.

பாதிக்கப்பட்டவர் ஏதேனும் சூழ்நிலைகளில் இறந்துவிட்டால், அத்தகைய நிகழ்வை அறிந்த எவரேனும் ஆள் பாதிக்கப்பட்டவரின் குடும்ப உறுப்பினர்களின் சம்மதத்துடன் முறைப்பாடு செய்யலாம்.

இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு, ஏதேனும் தீய எண்ணமுடைய அல்லது அற்பமான மற்றும் தவறாக வழிநடத்தும் முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளாது என்பதுடன் அத்தகைய முறைப்பாடுகளைச் செய்யும் எந்தவொரு ஆளுக்கெதிராகவும் நடவடிக்கை எடுக்கும்.

## 5.2 முறைப்பாட்டில் என்ன இருக்க வேண்டும்?



### 5.3 யாருக்கு முறைப்பாடு செய்யப்பட வேண்டும்?

பாலியல் தொல்லை அல்லது துஷ்பிரயோகம் தொடர்பான முறைப்பாடுகள், குறைந்தபட்சம் ஐம்பது சதவீதம் (50%) பெண் பிரதிநிதித்துவத்தைக் கொண்ட ஒரு முறைப்பாட்டுக் குழுவால் பெறப்படும். இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவால் நியமிக்கப்படும் முறைப்பாட்டுக் குழுவின் உறுப்பினர்கள் பின்வருவனற்றைச் சேர்ந்த உறுப்பினர்களை கொண்டிருக்க வேண்டும்:

| இல | உறுப்பினர் | தகவுத்திறன் |
|---|---|---|
| 1 | பெயர்பெற்ற முன்னாள் விளையாட்டு வீராங்கனை ஒருவர் | சர்வதேச சுற்றுத் தொடர்களில் இலங்கையை பிரநிதித்துவப்படுத்திய முன்னாள் மூத்த விளையாட்டு வீராங்கனை |
| 2 | இரண்டு சட்ட அலுவலர்கள் | பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் வேறு ஏதேனும் சட்டவாக்கங்கள் தொடர்பான ஆழமான அறிவைக் கொண்டவர்கள் மற்றும் பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோங்களை தடுப்பதில் ஈடுபட்டவர்கள் |
| 3 | இலங்கை ஒழும்பிக் குழுவின் மகளிர் குழுமத்தின் உறுப்பினர் | ஏதேனும் அக்கறை முரண்பாடு இல்லாத தேசிய ஒலிம்பிக் குழுவின் மகளிர் குழுமத்தின் பெண் உறுப்பினரொருவர் |

## 5.4 முறைப்பாட்டுக்கான நடைமுறை

**முறைபாட்டுக் குழு**

### A) முறைப்பாட்டைப் பெறல்

- முறைப்பாட்டை பெற்று ஏற்றுக்கொள்ளல்;
- முறைப்பாட்டாளர் அவனது/ அவளது மனக்குறையை வெளிப்படுத்த அச்சமற்ற சூழலை பேணும் பொருட்டு முறைப்பாட்டாளரிடம் ஒரு பச்சாதாப மனப்பான்மையை வெளிப்படுத்த வேண்டும்;
- (இதனகத்துப்பின்னர் விவரிக்கப்படும்) செயற்பாட்டு பொறிமுறைக்குள் முறைசார் மற்றும் முறைசாரா விருப்பத் தெரிவுகளை ஆராய்தல்;
- முறைப்பாடு தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவருக்கு அறிவித்தல்.

### B) நேர்காணல்கள்

- முறைப்பாட்டாளர், குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவர் மற்றும் சாட்சிகள் (எதேனும் இருப்பின்) ஆகியோருடன் தனித்தனியாக நேர்காணலை நடத்துதல்.

விசாரணைக் குழு

### C) விசாரணை

- முறைப்பாட்டாளர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவர் இருவரும் சம்பவத்தின் தங்கள் கருத்துக்களை (ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ) முன்வைக்க ஒரு நியாயமான வாய்ப்பை வழங்குதல்;
- முக்கிய சாட்சிகளை விசாரித்தல்;
- குறைந்த வயதுடைய முறைப்பாட்டாளர்கள் அழைத்துவரப்பட அனுமதியளிக்கப்படல்.

### D) காரண ஆய்வு

- விசாரணையின் போது சேகரிக்கப்பட்ட தகவல்களை, பொருத்தமான சட்டத்தை பயன்படுத்துவதன் மூலம் விமர்சன ரீதியாக பகுப்பாய்வு செய்து மதிப்பிடுதல்;
- நிகழ்வுகளின் தொடரை தாபிப்பதற்கு காலவரிசையை உருவாக்குதல்;
- முறைப்பாட்டாளரினால், குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவரினால் மற்றும் சாட்சிகளினால் வழங்கப்பட்ட ஒவ்வொரு கூற்றுக்களுக்குமிடையிலான ஒற்றுமைகளையும் வேறுபாடுகளையும் ஒப்பீடு செய்தல்.

### E) ஆய்வு முடிவுகளும் பரிந்துரைகளும்

- ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் பரிந்துரை செய்தல்;
- விசாரணைக் குழுவின் முடிவைக் கொண்ட விரிவான அறிக்கையை தயாரித்தல்.

## A. முறைப்பாட்டைப் பெறல்

முறைப்பாட்டுக் குழுவினால் முறைப்பாடுகளைப் பெறுதல் மற்றும் கையாளுதல் ஆகியவை இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகக் கொள்கை செயற்பாட்டு பொறிமுறைக்கமைவாக இருக்க வேண்டுமென்துடன் முறைப்பாட்டுக் குழு, பின்வருவனவற்றை முதற் தோற்றளவில் திருப்திப்படுமாயின் முறைப்பாடு முறைபாட்டுக் குழுவினால் தொடரப்படும்:

- குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவர் பாலியல் தொல்லை மற்றும்ஃ அல்லது துஷ்பிரயோகச் செயலாக கருதப்படும் முறையற்ற மற்றும்ஃ அல்லது அபாயகரமான நடத்தை வெளிப்படுத்தியுள்ளனர்;
- அந்நடத்தை முறைப்பாட்டாளரை நோக்கி செய்யப்பட்டது;
- முறைப்பாட்டாளர் தீங்கு அல்லது தீங்கு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளை அனுபவித்தார்.

குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவரும் முறைப்பாட்டாளரும் முறைப்பாட்டுக் குழுவை சந்தித்து முறைப்பாட்டின் தீவிரத் தன்மையை பொறுத்து, முறைப்பாட்டுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான முறைசார் மற்றும் முறைசாரா நிவாரண பொறிமுறைகளுக்கான விருப்பங்களை ஆராயுமாறு அறிவுறுத்தப்படுவார்கள்.

- **முறைசாரா பொறிமுறை**

இது குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவருக்கு விரும்பத்தகாத நடத்தையை உடனடியாக நிறுத்துமாறு ஆலோசணை வழங்குதல் அல்லது எச்சரித்தல் அல்லது திறத்தவர்களுக்கிடையிலான பிணக்குகளை தீர்க்க ஒரு நடுநிலையான நபரை மத்தியஸ்தராக நியமித்தல் (அத்தகைய மத்திஸ்தர் தனது பரிந்துரையை முறைப்பாட்டுக் குழுவுக்கு சமர்பிப்பார்) ஆகியவற்றை உள்ளடக்கும். எனினும் முறைப்பாட்டுக் குழுவானது எல்லா நேரங்களிலும் முறைப்பாட்டின் கடுமைத் தன்மையை கருத்திற்கொள்ள வேண்டுமென்பதுடன் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவருடன் நேரடியாக கருமத்தை தீர்த்துக்கொள்ள முறைப்பாட்டாளருக்கு ஆலோசணை வழங்குவதிலிருந்து தவிர்ந்து கொள்ளலும் வேண்டும்.

- **முறைசார் பொறிமுறை**

முறைப்பாட்டாளர் தெரிவு செய்யும் பட்சத்தில் அல்லது மத்தியஸ்தர் பரிந்துரைக்கும் பட்சத்தில் அல்லது முறைப்பாட்டின் தீவிரத் தன்மை முறைசார் தீர்வு காணலை வேண்டி நிற்கும் பட்சத்தில், முறைப்பாட்டுக் குழு மேலே குறிப்பிடப்பட்டுள்ள செயல்முறையை தேர்ந்தெடுக்கும் என்பதுடன் முறைப்பாட்டுக் குழு உறுப்பினர்கள் எந்தவித அக்கறை முரண்பாடு இல்லை என்பதையும் உறுதிசெய்ய வேண்டும். அதன்பின்னர் முறைப்பாட்டுக் குழுவானது முறைப்பாடு கிடைக்கப்பெற்று 14 நாட்களுக்குள் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவருக்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன் 30 நாட்களுக்குள் முறைப்பாட்டிற்கு

மறுமொழியை எழுத்தில் சமர்பிப்பதற்கு குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவருக்கு வாய்ப்பு வழங்கப்படவும் வேண்டும். இதற்கு மேலதிகமாக, முறைப்பாட்டுக் குழு முறைப்பாட்டினதும் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவரின் பதில் (ஏதேனும் இருப்பின்), சாட்சியங்களின் பட்டியல், பொருத்தமான எல்லா சட்டவாக்கங்கள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களுடனான நேர்காணல் திட்டம் உள்ளடங்களான அடுத்துவரும் ஆவணங்ளினதும் தனியான இரகசியமான கோப்பொன்றை உருவாக்க வேண்டும். அத்துடன் முறைப்பாட்டின் நிலை குறித்து வழக்கமான புதுப்பிப்புக்கள் முறைப்பாட்டாளருக்கு வழங்கப்படுதலும் வேண்டும்.

## B. நேர்காணல்கள்

நேர்காணல் செய்யப்படுபவர் பயமுறுத்திச் சம்மதிக்கச் செய்யப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்காக ஒவ்வொரு ஆளுக்குமான நேர்காணல்கள், தனித்தனியாகவும் இரகசியமாகவும் நடாத்தப்பட வேண்டும். நேர்காணலானது, செயன்முறையின் இரகசியத்தன்மையை பேணுவதற்காக இரகசியமான சூழலில் இடம்பெறுதல் வேண்டும். மேலும் நேர்காணலை நடாத்தும் போது பின்வரும் வழிகாட்டுதல்களை பின்பற்ற வேண்டும்:

(a) நிகழ்வுகளின் வெவ்வேறு நிலைகளை புரிந்துகொள்ளும் அதேவேளையில் பச்சாதாபத்துடன் இருங்கள்.

(b) நேர்காணல் செயன்முறை மற்றும் விடயத்தின் உணருமையை விளக்குக.

(c) விடயத்தை தெளிவாக புரிந்துகொள்ள உதவும் பொருத்தமான கேள்விகளை கேளுங்கள்.

(d) பொருத்தமான இடமொன்றை தெரிவு செய்க.

(e) நேர்காணலை எழுத்திலான குறிப்புகள் மற்றும் கேள்விபுல பதிவுகள் மூலம் பதிவு செய்யவும்

(f) கூற்றுக்களின் அறிக்கையில் கையொப்பத்தை பெற்றுக்கொள்ளல்.

## C. விசாரணை

விசாரணையானது, மூன்றில் இரண்டு பெண்கள் (50% விட அதிகமான) இருக்க வேண்டிய பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கிய விசாரணைக் குழுவின் முன்னிலையில் இடம்பெறும்:

I. இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் அல்லது செயலாளர் நாயகம் (பதவிவழி உறுப்பினர்கள்)

II. இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் மகளிர் குழுமத்தின் தவிசாளர்

III. விளையாட்டுத்துறை அமைச்சின் உதவிப் பணிப்பாளர் நாயகம் அல்லது விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் நாயகத்தினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரிகள்.

IV. இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் சட்ட அறிஞரொருவர்

V. குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவரின் தேசிய விளையாட்டு சம்மேளனத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதியொருவர்

VI. இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் பாலியல் தொல்லை முறைப்பாட்டாளர் குழுவின் பிரதிநிதிகள் இருவர்

விசாரணையானது, முறைப்பாட்டாளர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவர் ஆகிய இருவருக்கும் நியாயமான கேட்பு அளிக்கப்படும் வகையில், முறையான விசாரணையாக இருக்க வேண்டுமென்பதுடன் இரு திறத்தவர்களும் தங்கள் வழக்கிற்கு ஆதரவாக சான்றுகளை வழங்கவும் சாட்சிகள் மற்றும் அவர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட சான்றுகளை குறுக்கு விசாரணை செய்யவும் சமமான வாய்ப்பு வழங்கப்படவும் வேண்டும். விசாரணைக்கு குழுவின் முன்னாலான விசாரணை, எழுத்திலும் ஆடியோ பதிவுகள் மூலமாகவும் பதிவுசெய்யப்பட்டு, கருமத்தின் சிக்கலான தன்மை அல்லது விதிவிலக்கான சூழ்நிலைகள் காரணமாக, அதன் அறிக்கையில் நீடித்த காலம் தேவையென வெளிப்படையாக குறிப்பிடப்பட்டிருந்தாலேயொழிய, 21 நாட்களுக்குள் விசாரணை முடிக்கப்பட வேண்டும்.

அத்தகைய விசாரணை செயன்முறையை நடாத்துகையில் விசாரணைக் குழுவினால் கடைப்பிடிக்கப்படவேண்டிய இயற்கை நீதி விதிகளுக்கு தடையின்றி, குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவர் பின்வரும் உரிமைகளுக்கு உரித்துடையோராதல் வேண்டும்:

a) விசாரணைக் குழுவின் ஆய்வு முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் உள்ளடங்களாக விசாரணை செயன்முறையின் பாகமாக இருக்கும் எல்லா ஆவணங்களின் பிரதிகள்;

b) அத்தகைய விசாரணையில் பிரதிநிதித்துவம்;

c) விசாரணை நடவடிக்கைகளின் போது பார்வையாளர் ஒருவரை உடனிருக்கச் செய்தல்.

## D. காரண ஆய்வு

விசாரணையின் பின்னர், விசாரணைக் குழுவானது:

- முறைப்பாட்டின் சாரம்சத்தை அடையாளம் காணுதல் வேண்டும்.
- நிகழ்வுகளின் வரிசையை உருவாக்கும் காலவரிசையை தயாரித்தல் வேண்டும்.
- நிகழ்வுகளின் வெவ்வேறு வடிவங்களை ஒப்பிடுதல் வேண்டும்.
- பொருத்தமான சட்டவாக்க சட்ட ஏற்பாடுகள், கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களை கருத்திற்கொண்டு பாலியல் தொல்லை அல்லது துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதா இல்லையா என்பதை நிகழ்தகவுச் சமநிலையின் அடிப்படையில் தீர்மானித்தல் வேண்டும்.

## E. ஆய்வு முடிவுகள் மற்றும் பரிந்துரைகள்

விசாரணைக் குழு, முறைப்பாட்டை ஆதரவளிப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் பொருத்தமான பரிந்துரைகளை ஆக்குதலும் வேண்டும்.

- விசாரணைக் குழு முறைப்பாட்டுக்கு எதிராக தீர்மானம் எடுப்பின், முறைப்பாட்டாளருக்கு எதுவித தீர்வும் கிடையாது. ஆயினும் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவருக்கு எதிராக முறைப்பாட்டாளர் தவறான அல்லது தீய எண்ணத்துடன் குற்றச்சாட்டை முன்வைத்ததாக எண்பிக்கப்படின், முறைப்பாட்டாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம்.
- விசாரணைக் குழுவானது குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவர் பாலியல் தொல்லை குற்றத்தை புரிந்துள்ளார் என்று கண்டறிந்தால், தவறான செயலின் தீவிரத்தன்மைக்கேற்ப தண்டனைகளை பரிந்துரைப்பதற்கான தற்றுணிவைக் கொண்டுள்ளது.
- சூழ்நிலைகள் நியாயப்படுத்தப்படும் பட்சத்தில், நிதிச் சேதங்களுக்காக மற்றும்ஃ அல்லது வேறு ஏதேனும் பின்வருவனவற்றுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவருக்கு எதிராக மேலதிக சட்டரீதியான உதவியை பெறுமாறு முறைப்பாட்டாளருக்கு பரிந்துரைக்கலாம்:
  - ஏற்படுத்தப்பட்ட மன அதிர்;ச்சி, மன உளைச்சல்
  - ஏற்பட்ட மருத்துவச் செலவுகள்
  - தொழில் இழப்பு, முதலியன. மற்றும்ஃ அல்லது வேறு நிதி இழப்பு

## 6. விசாரணைக் குழுவின் ஆய்வு முடிவுகளின் அடிப்படையிலான நடவடிக்கை

முறைப்பாட்டுக் குழுவிடமிருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்று 21 நாட்களுக்குள், முறைப்பாட்டின் விவரம் மற்றும் இயைபான எல்லா நிகழ்வுகள் மற்றும் சூழ்நிலைகள், பின்பற்றப்பட்ட நடைமுறை, இயைபான சட்டங்கள், ஏற்புடையற்பாலதான கொள்கைகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட வலுவளிப்பு ஏNதுனுமிருப்பின் உள்ளடங்களாக ஆய்வு முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய விரிவான அறிக்கையொன்றை விசாரணைக் குழு தயாரித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை, அதன் முறைப்பாட்டாளர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவர் வழங்கப்பட்ட பிரதிகளுடன் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு சமர்பிக்கப்படுதல் வேண்டும். அதன்பின்னர், இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு 14 நாட்களுக்குள் விசாரணைக் குழுவின் பரிந்துரைகளை கவனத்திற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அத்தகைய நடவடிக்கையை முழுமையாக செயல்படுத்துவது அவசியம்

அல்லது பொருத்தமானது என்று இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு கருதுகின்றவிடத்து, குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவரின் இயைபான தேசிய விளையாட்டு சம்மேளத்தினூடாக இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு அத்தகைய நடவடிக்கையை வழிப்படுத்தலாம் மற்றும் விதிக்கலாம்.

இவ் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் கொள்கையை நிறைவேற்றுகையில் எடுக்கப்படும் எல்லா நடவடிக்கைகளும் எவரேனும் முறைப்பாட்டாளருக்கு மற்றும்ஃ அல்லது பாதிக்கப்பட்ட திறத்தவருக்கு சட்டத்தில் கிடைக்கும் ஏதேனும் உரிமைகள் மற்றும் துணையாதாரதத்துக்கு மேலதிகமாகவும் பராபட்சமின்றியும் இருத்தல் வேண்டும்.

## 7. இரகசியத்தன்மை

பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகம் குறித்து முறைப்பாடு அளிப்பது மிகவும் கடினம் என்பதையும் பாலியல் தொல்லை மற்றும் துஷ்பிரயோகத்திற்கு தவறாக குற்றத்தீர்பளிக்கப்படுவது பேரழிவை ஏற்படுத்தும் என்பதையும் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு புரிந்துகொள்கிறது. இக்கருமத்தை இரகசியமாக வைத்திருப்பதில் முறைப்பாட்டாளர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவர் ஆகிய இருவரின் நலன்களையும் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு அங்கீகரிக்கிறது. ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது பிற தீர்வு செயன்முறை அல்லது சட்டத்தினால் அத்தகைய வெளிப்படுத்தல் தேவைப்படுத்தப்பட்டாலொழிய இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு மற்றும் அதன் பிரதிநிதிகள் முறைப்பாட்டாளர்களின் பெயர், முறைப்பாட்டிற்கு வழிவகுத்த சூழ்நிலைகள் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட திறத்தவரின் பெயர் என்பவற்றை வெளித்திறத்தவருக்கு வெளிப்படுத்தாது. ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது பிற தீர்வு செயன்முறையால் வெளிப்படுத்தல் தேவைப்படும் சந்தர்பங்களில் அல்லது சட்டத்தால் வெளியிடப்பட தேவைப்படும் சந்தர்பங்கள் தவிர, கூட்டங்களின் உள்ளடக்கங்கள், நேர்காணல்கள், விசாரணைகளின் முடிவுகள் மற்றும் பிற தொடர்புடைய பொருட்கள் உட்பட அனைத்து முறைப்பாடு பதிவுகளும் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவினால் இரகசியமாக பாதுகாக்கப்படும்.

அனைத்து அறிக்கையிடப்பட்ட நிகழ்வுகளிலும், சம்மந்தப்பட்ட எல்லா மக்களின் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை பாதுகாக்க கவனமாக கவனத்திற்கொண்டு, ஒரு விரைவான, முழுமையான, நியாயமான விசாரணை நடைபெறும். விசாரணையின் முடிவில் அனைத்து ஆவணங்களை முத்திரையிடுவது உட்பட தனியுரிமை மற்றும் இரகசியத்தன்மையுடன் தொடர்புடைய வழக்கமான நடைமுறைகள் எல்லா நேரங்களிலும் கடைப்பிடிக்கப்படும்.

பாதுகாப்பான விளையாட்டு கொள்கையின் ஆங்கில பதிப்புரு, அதன் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் பாதுகாப்பான விளையாட்டுக் கொள்கை செயற்பாட்டு வழிமுறை மற்றும் அதன் மொழிபெயர்க்கப்பட்ட பதிப்புருக்கள் ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு ஏற்படின், ஆங்கில பதிப்புரு மேலோங்கும்.